# எட்டுவது எளிது

# தமிழ்

## பத்தாம் வகுப்பு

அனைவரும் தமிழில் தேர்ச்சி என்பதே குறிக்கோள்

மெல்ல மலரும் மாணவர்களுக்கான கட்டகம்

பள்ளிக் கல்வித் துறை

திண்டுக்கல் மாவட்டம்

# கட்டகம் கண்ட முறையும் நன்றியும்

இக்கட்டகத்தைக் கண்ணுறும் அனைவருக்கும் இனிய வணக்கம். தமிழ் இனிமையான மொழி; எளிதில் கற்றுச் சுவைக்க வல்ல தெண்மொழி. பள்ளி அளவில் சில காலங்களாகத் தமிழ் மொழிப் பாடத்தில் மாணவர்களின் தேர்ச்சித்திறன் தேய்ந்துள்ளது. எப்போதும் இல்லாத வகையில் தற்போது மாணவர்கள் மொழிப்பாடத்தில் ஒற்றை இலக்கத்தில் மதிப்பெண் பெற்றுவருவது ஆசிரியர்களை மனத்துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. எனவே, மெல்ல மலரும் இம்மொட்டு மாணவர்களைப் பள்ளத்தில் இருந்து மேடேற்றித் "தேர்ச்சி" என்ற இலக்கை முதலில் எட்டுவதற்காக எடுத்து வைத்த முயற்சியின் வெளிப்பாடே இந்த **"எட்டுவது எளிது"** என்னும் கட்டகம்.

இக்கட்டகத்தில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்கள் மட்டும் முடிந்தமுடிபு அல்ல. ஒரு வழிகாட்டி மட்டுமே என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இது பெயரளவில் மட்டுமல்லாமல் பக்க அளவையும் கருத்தில்கொண்டு உருவாக்கப்பட்ட குறுங்கட்டகம். இதனைப் பயன்படுத்தித் தேர்ச்சி பெற்றபின் ஏற்படும் நேர்மறைச் சிந்தனையுடன் அதிக மதிப்பெண்களைப் பெற மாணவர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தற்போதுள்ள சூழலில் மெல்ல மலரும் மாணவர்களுக்காக மட்டும் இதனைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி நல்கிய **பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) முனைவர் திரு.வெ. ஜெயக்குமார்** அவர்களுக்குச் சிரம்தாழ்ந்த நன்றிகள். மேலும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி விழுக்காட்டை உயர்த்துவதற்காகத் தொடர்ந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு நெறிகாட்டுதல்களை வழங்கிவரும் திண்டுக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.அ.நாசருதீன் அவர்களுக்கும், திண்டுக்கல் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) முனைவர் திரு.இ.பாண்டித்துரை அவர்களுக்கும், பழனி மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) திரு.பெ.திருநாவுக்கரசு அவர்களுக்கும், முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் (மேனிலை) திரு.வை.கதிரேசன் மற்றும் நேர்முக உதவியாளர் (இடைநிலை) திரு.வே.வேளாங்கண்ணி அவர்களுக்கும் மிக்க நன்றிகள்.

இந்தக் கட்டகம் உருவாக்கத்திற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கி உதவிய **வத்திப்பட்டி, அரசு மேனிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு.ஞா.அமல்ராஜ்** அவர்களுக்கும், ஆலோசனைகள் வழங்கி ஆற்றுப்படுத்திய **கொழிஞ்சிப்பட்டி, அரசு உயர் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு.பெ.சோமசுந்தரம்** அவர்களுக்கும் நன்றிகள்.

மொழிப்பாடத்தில் அனைவரும் தேர்ச்சி பெற்றுப் பூரிப்படைந்த முகத்தைப் பார்க்கும் ஆவலுடனும் வாழ்த்துகளுடனும்...

**பள்ளிக் கல்வித் துறை**
**திண்டுக்கல் மாவட்டம்.**

**கட்டக உருவாக்கத்தில் மகிழ்வுடன்,**
முனைவர் **கொ.சுப.கோபிநாத்,**பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அரசு மேனிலைப் பள்ளி, வத்திப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் – 624401.

# ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது -
   **வணிகக் கப்பல்களும்  ஐம்பெருங்காப்பியங்களும்**
2. '**<u>காய்ந்த இலையும்</u>** காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது - **சருகும் சண்டும்**
3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் - **எம் + தமிழ் + நா**
4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே – **பாடல், கேட்டவர்.**
5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை – **மணிவகை**
6. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம், உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை? – **மோனை, எதுகை**
7. செய்தி 1- ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
   செய்தி 2 – காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
   செய்தி 3 – காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.
   **விடை: செய்தி 1,3 ஆகியன சரி.**
8. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   **கடல் நீர் ஆவியாகி மேகமாதல்**
9. '**<u>பெரியமீசை</u>** சிரித்தார்'- அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?
   **அன்மொழித்தொகை**
10. **பொருத்துக.** கொண்டல் – கிழக்கு, கோடை – மேற்கு, வாடை – வடக்கு, தென்றல் –தெற்கு.
11. பின்வருவனவற்றுள் முறையான தொடர் - **தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.**
12. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" – என்னும் அடியில் பாக்கம் என்பது – **சிற்றூர்**.
13. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது – **வேற்றுமை உருபு.**
14. காசிக்காண்டம் என்பது – **காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்.**
15. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு'. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை – **இன்மையிலும் விருந்து.**

16. ‘உனதருளே பார்ப்பன் அடியேனே’- யாரிடம் யார் கூறியது?- **இறைவனிடம் குலசேகராழ்வார்.**

17. தலைப்பு: செயற்கை நுண்ணறிவு

குறிப்புகள்: கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.

திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியை காண்பிப்பது.

**விடை: தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.**

18. பரிபாடல் அடியில் ‘விசும்பு இசையும்’ என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

**வானத்தையும் பேரொலியையும்.**

19. குலசேகர ஆழ்வார் ‘வித்துவக்கோட்டம்மா’ என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே – **பால்வழுவமைதி, திணை வழுவமைதி.**

20. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது? **- இலா.**

21. ‘மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்’ என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி **– சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.**

22. அருந்துணை என்பதைப் பிரித்தால் – **அருமை + துணை.**

23. “இங்கு நகரப் பேருந்து நிற்குமா?” என்று வழிப்போக்கர் கேட்டது ____ வினா. “அதோ அங்கே நிற்கும்” என்று மற்றொருவர் கூறியது ____ விடை. **– அறியா வினா, சுட்டு விடை.**

24. “அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி , மருளை அகற்றி மதிக்கும் தெருளை” – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது? **- கல்வி.**

25. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ____ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ____-

**மன்னன், இறைவன்.**

26. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் - **குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்.**

27. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத் தொடர் எது? - **ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.**

28. மலர்கள் தரையில் நழுவும். எப்போது? **- தளரப் பிணைத்தால்.**

29. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது? –

**கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?**

30. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?- **அங்கு வறுமை இல்லாததால்.**

31. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க. **விடை: உழவு, ஏர், மண், மாடு.**

32. ‘மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்’ –

மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே **– திருப்பதியும் திருத்தணியும்.**

33. ‘தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்’ என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் - **நெறியோடு நின்று காவல் காப்பவர்.**

34. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் – **வலிமையை நிலை நாட்டல்.**

35. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது – **சிலப்பதிகாரம்.**

36.மேன்மை தரும் அறம் என்பது – **கைம்மாறு கருதாமல் அறம் செய்வது.**

37. ‘வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்’ இவ்வடி குறிப்பிடுவது – **இடையறாது அறப்பணி செய்தலை.**

38. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் – **அதியன்; பெருஞ்சாத்தன்.**

39. காலக் கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் – **இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது.**

40. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் – **அகவற்பா.**

41.”இவள் தலையில் எழுதியதோ, கற்காலம்தான் எப்போதும்” – இவ்வடிகளில் கற்காலம் என்பது – **தலையில் கல் சுமப்பது.**

42. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது – **பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்.**

43. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ________வேண்டினார். **– கருணையன் எலிசபெத்துக்காக.**

44. வாய்மையே மழை நீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி **– உருவகம்.**

45. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் – இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது – **சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.**

# இரண்டு மதிப்பெண் வினாக்கள் (மொழிப்பயிற்சி)

1. தேன், நூல், பை, மலர்,வா – இத்தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.

**விடை: தேன் உண்ட வண்டு, நூல் பல கல், பையில் புத்தகம், மலர்மாலை அணிக, வா போகலாம்.**

2. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக. காண், சிரி, படி, தடு.

விடை: **காண் – காட்சி, காணுதல், காணல், காணாமை**

**சிரி – சிரிப்பு, சிரித்தல், சிரிக்காமை**

**படி – படிப்பு, படித்தல், படிக்காமை**

**தடு – தடுப்பு, தடுத்தல், தடுக்காமை.**

3.மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலை மீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்.- இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனித்தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக

விடை: **அழைக்கும் – அழைத்தல், ஏறுவேன் – ஏறுதல், அமர்வேன் – அமர்தல், பார்ப்பேன் - பார்த்தல், எய்தும் – எய்துதல்.**

4. கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, பாடுதல் –இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.

விடை: **பாடுதல் – தொழிற்பெயர், கட்டு, சொட்டு – முதனிலைத் தொழிற்பெயர், வழிபாடு, கேடு – முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்.**

5. **சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**

“தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்
ஓதி உனர்ந்தின் புருவோமே.

**விடை:**

“தே**னி**லே ஊ**றி**ய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் – நிதம்
ஓதி உ**ண**ர்ந்தின் பு**று**வோமே.

6. **கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.**

(குவியல், குலை, மந்தை, கட்டு)

| **சொல்** | **கூட்டப்பெயர்** | **சொல்** | **கூட்டப்பெயர்** |
|---|---|---|---|
| கல் | **குவியல்** | புல் | **கட்டு** |
| பழம் | **குலை** | ஆடு | **மந்தை** |

**7. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

அ. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.

கலையரங்கத்தில் எனக்காகக் **காத்திருக்கின்றவரை**அழைத்து வாருங்கள்.

ஆ. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

ஊட்டமிகு உணவு **உண்டவர்** நீண்ட வாழ்நாள் பெற்றார்.

இ. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

நேற்று என்னைச் **சந்தித்தவர்** என் நண்பர்.

ஈ. பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

பொது அறிவு நூல்களைத் தேடிப் **படித்தவர்** போட்டித் தேர்வில் வென்றார்.

**8. தொடர்களில் அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்ளை மீள எழுதுக.**

அ. **உலகில்** வாழும் **மக்களில்** சிலர் **கனி**யிருக்கக் காய் **புசி**த்தலைப் போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி **இன்னற்**படுகின்றனர்.

**புவியில்** வாழும் **மனிதர்களில்** சிலர் **பழமி**ருக்கக் காய் **உண்ணு**தலைப் போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசித் **துன்பப்**படுகின்றனர்.

ஆ. வள்ளல் குமணன் **வறுமையால்** வாடி வந்த **புலவனுக்குத்** தனது தலையைக் **கொடுத்து** மங்காப் **புகழ்** பெற்றான்.

வள்ளல் குமணன் **ஏழ்மையால்** வாடி வந்த **கவிஞருக்குத்** தனது தலையைக் **அளித்து** மங்காப் **பெருமை** பெற்றான்.

இ. நளனும் அவனது **துணைவியும்** நிடத நாட்டுக்கு வந்ததைக் கண்டும் அந்நாட்டு மக்கள் மழை**முகில்** கண்ட **மஞ்ஞை** போலக் **களி** கொண்டனர்.

நளனும் அவனது **மனைவியும்** நிடத நாட்டுக்கு வந்ததைக் கண்டும் அந்நாட்டு மக்கள் மழை**மேகம்** கண்ட **மயில்**போல **மகிழ்ச்சி** கொண்டனர்.

ஈ. **சோலையில்** பூத்த மணமலர்களில் **சுரும்புகள்** மொய்த்துப் பண்பாடி **மது**வுண்டன.

**பூங்காவில்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** மொய்த்துப் பண்பாடி **தேன்** உண்டன.

உ. **பசுப்**போல் **சாந்தமும் புலி**போல் **தீரமும் யானை** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**ஆவைப்**போல் **அமைதியும் உழுவை** போல் **சீற்றமும், வேழம்** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**9. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ.

விடை: **பூமணி, மணிமேகலை, செய்வான், பொன்செய், வான்மழை, மணிவிளக்கு, பொன்விலங்கு, பூவிலங்கு, தேன்மழை, பூமழை, பொன்மழை, பொன்மணி, விண்விளக்கு.**

**10. எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்ணுருவில் எழுதுக.**

| **செய்யுள் அடி** | **எண்ணுப்பெயர்** | **தமிழ் எண்ணுரு** |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | **நான்கு** | **ச** |
| எறும்பும் தன் கையால் எண்சாண் | **எட்டு** | **அ** |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | **ஐந்து** | **ரு** |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | **நான்கு, இரண்டு** | **ச, உ** |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | **ஆயிரம்** | **க000** |

**11. அகராதி கண்டு பொருள் எழுதுக.**

| **சொல்** | **பொருள்** | **சொல்** | **பொருள்** | **சொல்** | **பொருள்** |
|---|---|---|---|---|---|
| அடவி | காடு | அகன்சுடர் | உயர்ந்த தீபம் | அவிர்தல் | விளங்குதல் |
| அவல் | பள்ளம் | ஆர்கலி | கடல் | அழல் | நெருப்பு |
| சுவல் | தோள் | கட்புள் | விழித்திருக்கும் பறவை | உவா | முழு நிலவு |
| செறு | வயல் | கொடுவாய் | வளைந்த வாய் | கங்குல் | இரவு |
| பழனம் | வயல் | திருவில் | வானவில் | கனலி | சூரியன் |
| புறவு | காடு | மன்றல் | திருமணம் | அடிச்சுவடு | பாதத் தடம் |
| தூவல் | இறகு | மருள் | மயக்கம் | தால் | நாக்கு |
| உழுவை | புலி | அகவுதல் | ஒலித்தல் | ஏந்தெழில் | மிக்க அழகு |
| அணிமை | பக்கம், அருகில் | மிரியல் | மிளகு | வருத்தனை | பெருக்குதல் |
| அதசி | சணல் | துரிஞ்சில் | வௌவால் | குணதரன் | நற்குணமுள்ளவன் |
| செவ்வை | நேர்மை | நகல் | சிரித்தல், படி | பூட்கை | கொள்கை |

12. கலைச்சொல் அறிக.

| ஆங்கிலம் | தமிழ் | ஆங்கிலம் | தமிழ் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|---|---|
| Vowel | உயிரெழுத்து | Storm | புயல் | Classical literature | செவ்விலக்கியம் |
| Consonant | மெய் எழுத்து | Tornado | சூறாவளி | Epic literature | காப்பிய இலக்கியம் |
| Homograph | ஒப்பெழுத்து | Tempest | பெருங்காற்று | Devotional literature | பக்தி இலக்கியம் |
| Monolingual | ஒருமொழி | Land breeze | நிலக்காற்று | Ancient literature | பண்டைய இலக்கியம் |
| Conversation | உரையாடல் | Sea breeze | கடற்காற்று | Regional literature | வட்டார இலக்கியம் |
| Discussion | கலந்துரையாடல் | Whirle wind | சுழல் காற்று | Folk literature | நாட்டுப்புற இலக்கியம் |
| Nanotechnology | மீநுண் தொழில்நுட்பம் | Ultra violet rays | புற ஊதாக் கதிர்கள் | Modern literature | நவீன இலக்கியம்` |
| Biotechnology | உயிரித் தொழில் நுட்பம் | Space technology | விண்வெளித் தொழில் நுட்பம் | Cosmic rays | விண்வெளிக் கதிர்கள் |
| Inrared rays | அகச்சிவப்புக் கதிர்கள் | Emblem | சின்னம் | Thesis | ஆய்வேடு |
| Intellectual | அறிவாளர் | Symbolism | குறியீட்டியல் | Aesthetics | அழகியல் |
| Terminology | கலைச்சொல் | Artifacts | கலைப்படைப் புகள் | Myth | தொன்மம் |
| Consulate | துணைத் தூதரகம் | Guile | வணிகக் குழு | Patent | காப்புரிமை |
| Irrigation | பாசனம் | Document | ஆவணம் | Territory | நிலப்பகுதி |
| Belief | நம்பிக்கை | Philosopher | மெய்யியலாளர் | Renaissance | மறுமலர்ச்சி |
| Revivalism | மீட்டுருவாக்கம் | Humanisam | மனித நேயம் | Cabinet | அமைச்சரவை |
| Cultural Boundaries | பண்பாட்டு எல்லை | Cultural values | பண்பாட்டு விழுமியங்கள் | | |

**13. அடிக்கோடிட்ட தொகை நிலைத் தொடர்களை வகைப்படுத்துக.**

அ. **<u>அன்புச்செல்வன்</u>** திறன்பேசியின் **<u>தொடுதிரை</u>**யில் படித்துக்கொண்டிருந்தார்.

அன்புச்செல்வன் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை, தொடுதிரை – வினைத்தொகை

ஆ. அனைவருக்கும் **<u>மோர்ப்பானையை</u>**த் திறந்து **<u>மோர் கொடுக்கவும்</u>**.

மோர்ப்பானை – மோரினை உடைய பானை – 2ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

மோர் கொடுக்கவும் – 2ஆம் வேற்றுமைத் தொகை.

இ. **<u>வெண்டைக்காய்ப்</u>** பொரியல் **<u>மோர்க்குழம்பு</u>**க்குப் பொருத்தமாக இருக்கும்.

வெண்டைக்காய், மோர்க்குழம்பு – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

ஈ. **<u>தங்கமீன்கள் தண்ணீர்த்தொட்டி</u>**யில் விளையாடுகின்றன.

தங்கமீன் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை, தண்ணீர்த்தொட்டி – 2ஆம் வேற்றுமைத்தொகை

**14. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்

**விடை:** இன்சொல் – பண்புத்தொகை – இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.

எழுகதிர் – வினைத்தொகை – காலையில் எழுகின்ற கதிர் அழகு.

கீரிபாம்பு – உம்மைத்தொகை – பகைவர் கீரியும்பாம்புமாய் உள்ளனர்.

பூங்குழல் – அன்மொழித்தொகை – பூங்குழல் பேச்சினில் இனியவள்.

மலை வாழ்வார் – 7ஆம் வேற்றுமைத்தொகை – மலைமேல் வாழ்வாரின் தொழில் தேன் எடுத்தல்.

முத்துப்பல் – உவமைத்தொகை – நடிகையின் சிரிப்பில் முத்துப் போன்ற பற்கள் தெரிகின்றன.

**15. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.**

அ. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்; நீக்காவிட்டாலும் வாசனை தரும் – நறுமணம்.

ஆ. பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும் - புதுமை.

இ. இருக்கும்போது உருவமில்லை – இல்லாமல் உயிரினம் இல்லை – காற்று.

ஈ. நாலெழுத்தில் கண் சிமிட்டும். கடையிண்டில் நீந்திச் செல்லும் – விண்மீன்

உ. ஓரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம் - காடு.

**16. நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.**

அ. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்த்து. வானம் இருண்டது. வாடைக்காற்று வீசியது.

**காற்றின் பாடல்.**

ஆ. புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது; அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன. **– மொட்டின் வருகை.**

இ. சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல்; பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன. - **மிதக்கும் வாசம்.**

ஈ. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம்; மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சு விடும்; கசகசத்த உயிரினங்கள். **– உயிர்ப்பின் ஏக்கம்.**

உ. நின்றுவிட்ட மழை தரும் குளிர்; சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழை நீர்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம். **– நீரின் சிலிர்ப்பு.**

ஊ. குயில்களின் கூவலிசை. புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும். இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம். - **வானத்தின் நடனம்.**

17. **அடிக்கோடிட்ட சொற்களின் தொடர்வகைகளை எழுதுக.**

அ. பழகப் பழகப் பாலும் புளிக்கும் **– அடுக்குத் தொடர்.**

ஆ. வடித்த கஞ்சியில் சேலையை அலசினேன். **– பெயரெச்சத் தொடர்.**

இ. மேடையில் நன்றாகப் பேசினான். - **வினையெச்சத் தொடர்.**

ஈ. வந்தார் அண்ணன் **– வினைமுற்றுத் தொடர்.**

உ.அரிய கவிதைகளின் தொகுப்பு **– வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.**

18. **பழமொழிகளை நிறைவு செய்க.**

அ. உப்பில்லாப் ***பண்டம் குப்பையிலே.***

ஆ. ஒரு பானைச் ***<u>சோற்றுக்கு ஒரு சோறு பதம்.</u>***

இ. உப்பிட்டவரை ***<u>உள்ளளவும் நினை.</u>***

ஈ. விருந்தும் ***<u>மருந்தும் மூன்று நாள்.</u>***

உ. அளவுக்கு ***<u>மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.</u>***

19. **விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடிக்க.**

இ_கு (பறவையிடம் இருப்பது) - இற**கு**.

கு_தி (சிவப்பு நிறத்தில் இருக்கும்) – கு**ரு**தி.

வா_ ( மன்னரிடம் இருப்பது) – வா**ள்**.

அ_கா( தங்கைக்கு மூத்தவள்) – அ**க்**கா.

ம_ (அறிவின் மறுபெயர்) – ம**தி**.

பட_ ( நீரில் செல்வது) – பட**கு** . ***நூலின்பெயர்:*** **திருக்குறள்.**

20. **இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

அ. சிலை – சீலை: **சிலையைத்** திரைச்**சீலை**யால் மறைக்கிறார்கள்.

ஆ. தொடு – தோடு: **தொடும்**போது **தோடு** விழுந்தது.

இ. மடு – மாடு: வயல் ஓரம் உள்ள **மடு**வில் **மாடு** விழுந்தது.

ஈ. மலை – மாலை: **மாலை** நேர **மலை**யின் காட்சி அழகு.

உ. வளி – வாளி: **வாளி**யின் நீரில் உயிர்**வளி** உள்ளது.

ஊ. விடு – வீடு: **வீடு** செல்வேன் **விடு.**

21. **பொருள் வேறுபாடு உணர்த்துக.**

அ. ஊண் – உணவு; ஊன் – இறைச்சி.

ஆ. திணை – ஒழுக்கம்; தினை – தானியம்.

இ. அண்ணம் – மேல்வாய்; அன்னம் – பறவை, சோறு.

ஈ. வெல்லம் – இனிப்பு; வெள்ளம் – நீர்ப்பெருக்கு.

22. **கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.**

அ. அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார். - **கால வழுவமைதி.**

ஆ. "இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அதை அனைவரும் ஏற்பர்" என்று கூறினான்.- **இட வழுவமைதி.**

இ. சிறிய வயதில் இந்த மரத்தில் தான் ஊஞ்சல்கட்டி விளையாடுவோம். – **கால வழுவமைதி.**

ஈ. செல்வன், இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்திருக்கிறார். –

**பால் வழுவமைதி.**

23. **வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.**

காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா?

எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவிதுளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காது கேட்கும். பறவைகளுக்கு பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சி பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறலாம்.

**விடை:** காகத்திற்கு**க்** காது உண்டா? அதற்கு**க்** காது கேட்குமா?

எல்லா**ப்** பறவைகளுக்கும் காது உண்டு. செவி**த்**துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புற**ச்**செவிமடல் இருக்காது. காகத்திற்கு**க்** காது உண்டு. காது கேட்கும். பறவைகளுக்கு**ப்** பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சி**ப்** பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வு குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றே கூறலாம்.

24. **கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒருதொடர் அமைக்க.**

அ. **இயற்கை-செயற்கை:** செயற்கை இருந்தாலும் இயற்கை நேசி.

ஆ. **கொடு-கோடு:** மைதானத்தில் கோடுபோட்டுக் கொடுத்தார்.

இ. **கொள்-கோள்:** செயற்கைக் கோள் பற்றித் தெரிந்து கொள்.

ஈ. ***சிறு-சீறு*:** சிறுபாம்பு சீறியது.

உ. **தான் – தாம்**: அன்பினால்தான் தாம் உயர முடியும்.

ஊ. **விதி-வீதி:** வீதிதோறும் சாலைவிதிப் பலகைகள் வைக்க வேண்டும்.

25. **பத்தியைப் படித்துப் பதில் தருக.**

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

அ. பத்தியில் உள்ள அடுக்குத் தொடரை எடுத்தெழுதுக. **மீண்டும் மீண்டும்**

ஆ. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

**புவி தொடர்ந்து பெய்த மழையால் வெள்ளத்தில் மூழ்கியது.**

இ. பெய்த மழை- இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக. **பெய்மழை**

ஈ. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?

**வெப்பமும் மழையும் மாறி மாறி உருவானதால் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் அமைந்தது.**

உ. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

**தட்ப வெப்ப நிலை மாறி மாறி நடைபெறுவது உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகும்.**

26. **தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.**

அ. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் ***<u>கற்றல்</u>***

ஆ. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை ***<u>கரு</u>***

இ. கல் சிலை ஆகுமெனில், நெல் ***<u>சோறு</u>*** ஆகும்

ஈ. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து ***<u>எழுத்து</u>***

உ. மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது ***<u>பூவில்</u>***

27. குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக. (குறிப்பு: எதிர்மறையாக மாற்றுக.)

அ. மீளாத் துயர் – **மீளும் துயர்**

ஆ. கொடுத்துச் சிவந்த – **கொடுக்காது சிவந்த**

இ. மறைத்துக் காட்டு – **மறைக்காமல் காட்டு**

ஈ. அருகில் அமர்க – **தூரத்தில் அமர்க**

உ. பார்த்த படம் – **பார்க்காத படம்**

ஊ. எழுதாக் கவிதை – **எழுதிய கவிதை**

**28. வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக.**

அ. "காமராசர் நகர் எங்கே இருக்கிறது? – **அறியா வினா.**

"இந்த வழியாகச் செல்லுங்கள்" **- சுட்டு விடை.**

ஆ. "எனக்கு விடை எழுதித் தருகிறாயா?" – **ஏவல் வினா.**

"எனக்கு யார் எழுதித் தருவார்கள்?" – **வினாஎதிர் வினாதல் விடை.**

**29.தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

அ. கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

**<u>அழகிய குளிர்ந்த</u> கடம்பவனத்தை** விட்டு இறைவன் நீங்கினான்.

ஆ. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

**<u>குளிர்ந்த நிழல் தரும் மரத்தை</u>** வளர்ப்பது நன்மை பயக்கும்.

இ. வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

**<u>சோதனை நிறைந்த வாழ்க்கைப்</u>** பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

ஈ. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

**<u>அழியாச் செல்வமான கல்வியே</u>** ஒருவருக்கு உயர்வு தரும்.

உ. குழந்தைகள் தனித்தனியே எழுதித் தர வேண்டும்.

**<u>சுட்டித்தனம் நிறைந்த குழந்தைகள்</u>** தனித்தனியே எழுதித் தர வேண்டும்.

**30. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.**

அ. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் **புதையல்** யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் **புதைத்தல்** நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும்.

ஆ. காட்டு விலங்குகளைச் **சுடுதல்** தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் **சுட்டல்** திருந்த உதவுகிறது.

இ. காற்றின் மெல்லிய **தொடுதல்** பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான **தொடுத்தல்** பூக்களை மாலையாக்குகிறது.

ஈ. பசுமையான **காட்சியைக் காணுதல்** கண்ணுக்கு நல்லது.

உ. பொது வாழ்வில் **நடிப்பு** கூடாது. **நடித்தலில்** அவரை மிஞ்ச ஆள் கிடையாது.

**31. தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**

அ. அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தாள். (கலவைச் சொற்றொடராக்குக)

அழைப்புமணி **ஒலித்ததால்** கயல்விழி கதவைத் திறந்தாள்.

ஆ. இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்ககங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார். (தொடர் சொற்றொடராக்குக)

**இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்ககங்களில் அடுக்கி, புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.**

இ. ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக் கொண்டு, காலில் சலங்கை அணிந்துகொண்டு, கையில் ஒரு சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர். (தனிச்சொற்றொடர்களாக மாற்றுக)

**ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக் கொள்வர். காலில் சலங்கை அணிந்து கொள்வர். கையில் ஒரு சிறுதுணியை இசைக்கேற்ப வீசி ஆடுவர்.**

ஈ. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். (கலவைத் தொடராக்குக)

**கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதும் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.**

உ. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. (தனிச் சொற்றொடர்களாக்குக)

**ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.**

**32. தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**

அ. வானம் ***<u>கருக்கத்</u>*** தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.

ஆ. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ***<u>சிவந்தது.</u>***

இ. ***<u>வெள்ளை</u>*** மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.

ஈ. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் ***<u>பச்சைப்</u>*** புல்வெளிகளில் கதிரவனின் ***<u>மஞ்சள்</u>*** வெயில் பரவிக் கிடக்கிறது.

உ. வெயிலில் அலையாதே; உடல் ***<u>கருக்கும்.</u>***

**33. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**

| **ஊர்ப்பெயர்** | **மரூஉ** | **ஊர்ப்பெயர்** | **மரூஉ** | **ஊர்ப்பெயர்** | **மரூஉ** |
|---|---|---|---|---|---|
| புதுக்கோட்டை | புதுகை | திருச்சிராப்பள்ளி | திருச்சி | உதகமண்டலம் | உதகை |
| கோயம்புத்தூர் | கோவை | நாகப்பட்டினம் | நாகை | புதுச்சேரி | புதுவை |
| கும்பகோணம் | குடந்தை | திருநெல்வேலி | நெல்லை | மன்னார்குடி | மன்னை |
| மயிலாப்பூர் | மயிலை | சைதாப்பேட்டை | சைதை | மணப்பாறை | மணவை |

**34. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.**

அ. **மனக்கோட்டை:** படித்துப் பெரிய பதவிக்கு வர வேண்டும் என மனக்கோட்டை கட்டினான்.

ஆ. **கண்ணும் கருத்தும்:** பூங்கொடி கண்ணும் கருத்துமாய்ப் படித்தாள்.

இ. **அள்ளி இறைத்தல்:** வீண் சொற்களை அள்ளி இறைத்தல் கூடாது.

ஈ. **ஆறப்போடுதல்:** சில பிரச்சினைகளை ஆறப்போட்டல் அவை தானாக முடிந்துவிடும்.

**35. சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக.**

அ. **கானடை:** கால் நடை – காலால் நடத்தல், கான் அடை – காட்டைச் சேர்.

ஆ. **வருந்தாமரை:** வரும் தாமரை – வருகின்ற தாமரை, வரும் தா மரை – தாவி வரும் மான்.

இ. **பிண்ணாக்கு:** பிள் நாக்கு – பிளவுபட்ட நாக்கு, பிண்ணாக்கு (மாடுகளின் உணவு)

ஈ. **பலகையொலி:** பல கைகளின் ஒலி, பலகையின் ஒலி.

**36. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.**

அ. **தாமரை இலை நீர்போல:** புத்தர் இல்லற வாழ்வில் தாமரை இலை நீர் போலப் பற்றின்றி இருந்தார்.

ஆ. **மழைமுகம் காணாப் பயிர்போல:** தாயைப் பிரிந்திருந்த சேயின் முகம் மழைமுகம் காணாப் பயிர் போல வாடி இருந்தது.

இ. **கண்ணினைக் காக்கும் இமைபோல:** உழவன் வயலைக் கண்ணினைக் காக்கும் இமை போலக் காத்தான்.

ஈ. **சிலைமேல் எழுத்துப்போல:** இளமையில் கல்வி சிலைமேல் (கல் மேல்) எழுத்துப் போலப் பதியும்.

**37. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.**

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப் பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன

**விடை: சேரர்களின் பட்டப் பெயர்களில் "கொல்லி வெற்பன்", "மலையமான்" போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன் "கொல்லி வெற்பன்" எனவும், பிற மலைப் பகுதிகளை வென்றவர்கள் "மலையமான்" எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.**

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. ”மன்னும் சிலம்பே மணிமேகலை வடிவே, முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே”- எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

**சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி.**

2. ‘வேங்கை’ என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்துக.

**வேங்கை – பொதுமொழி – மரத்தைக் குறிக்கும்.**

**வேம் + கை – தொடர்மொழி – வேகின்ற கையைக் குறிக்கும்.**

3. “உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்” – குறளில் உள்ள அளபெடையின் வகையைச் சுட்டுக.

**இன்னிசை அளபெடை.**

4. ‘ நமக்கு உயிர் காற்று, காற்றுக்கு வரம் மரம், மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்’ – இது போன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

**மண்ணைக் காக்க மரங்களை நடுவோம்!**

**மரம் இயற்கையின் வரம்!**

5. வசன கவிதை – குறிப்பு வரைக.

**உரைநடையும் கவிதையும் இணைந்தது.**

**யாப்பு இலக்கணத்திற்கு அப்பாற்பட்டது.**

**பாரதியார் வசன கவிதையின் முன்னோடி.**

6. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகை நிலைத் தொடர்களை விரித்து எழுதித் தொடர் அமைக்க.

**தண்ணீர்குடி – தண்ணீரைக் குடி – 2ஆம் வேற்றுமைத் தொகை – தினமும் 3 லிட்டர் தண்ணீர் குடி.**

**தயிர்க்குடம் – தயிரை உடைய குடம் – 2ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை – மண்ணால் ஆன தயிர்க்குடம்.**

7. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

**கவலைப்படாதே. சீக்கிரம் வருவார்கள், தம்பி என்ன வேண்டும் சொல்! நான் உனக்கு வாங்கித் தருகிறேன்.**

8. மாஅல் – பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.

**மாஅல் – திருமால், செய்யுளிசை அளபெடை.**

9. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

**வாருங்கள்! வாருங்கள்!, நீங்கள் வந்தது மகிழ்ச்சி, நன்றாகச் சாப்பிடுங்கள்.**

10. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது.

'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?

**சிரித்துச் சிரித்துப் பேசினார்.**

11. "இறடிப் பொம்மல் பெறுகுவிர்" – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

**இறடிப் பொம்மல் – தினைச்சோறு. நன்னனைப் பார்க்கச் செல்வோர் தினைச் சோற்றை உணவாகப் பெறுவர்.**

12. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்கள் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

**பாரதியார் கவிஞர் -பெயர்ப் பயனிலை; நூலகம் சென்றார் – வினைப் பயனிலை;**

**அவர் யார்? – வினாப் பயனிலை.**

13. " **<u>நச்சப்படாதவன்</u>** செல்வம்" – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.

**நச்சப்படாதவன் – பிறருக்கு உதவி செய்யாதவன்.**

14. "கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடி உண்டாயினும் இல்"- குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

**கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் – இன்னிசை அளபெடை.**

15. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

**ரோபோ – எந்திர மனிதன் – மனிதர்களுக்கு உதவுதல்.**

**அலுவலகம், வங்கியில் ரோபோக்கள் பயன்பாடு.**

16. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் – இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

**ஆரல்வாய்மொழிக்குச் செல்ல வேண்டும் என்பதே சரி.**

**உறுதி கருதி 'ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன்' என்றதால் கால வழுவமைதி.**

17. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பங்கினை எழுதுக.

**மருந்து மட்டும் நோயைக் குணப்படுத்தாது.**

**அன்பான வார்த்தை, விரைவில் நலமாவீர்கள் என்ற நம்பிக்கை வார்த்தையும் குணப்படுத்தும்.**

18. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவை எனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

**உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் வெப்பமும் மழையும் ஆகும்.**

19. கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

**கேள்வியினான் – குசேலபாண்டியன், காதல்கேண்மையினான் – இடைக்காடனார்.**

20. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

**அருளைப் பெருக்கு அறிவைத் திருத்து! மயக்கம் தீர்க்கும் மருந்து!**

21. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**அமர் + த்(ந்) + த் + ஆன். அமர் – பகுதி; த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்த கால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.**

22. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும்.

– இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருளை வகைப்படுத்தி எழுதுக.

**நிலம் – காடு; பொழுது – மழைக்காலம், மாலை; கருப்பொருள் – வரகு.**

23. கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

**பொய்யான வாழ்வு இன்றுமுதல் இறங்கத் தொடங்கிவிட்ட்து. அதனைப் பார்க்க எழுந்திடுவாய்.**

**எம தூதர் கையிலே சென்று உறங்குவாய்.**

24. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

**மலரே பிரபஞ்சம் என உருவகம் ஆகியுள்ளது.**

**பல்லுயிர்ப்பெருக்கம் பற்றிய அறிவியல் சிந்தனை உள்ளது.**

25. கருப்பொருளைத் திருத்தி எழுதுக.

அ. உழவர்கள் மலையில் உழுதனர். – **குறவர்கள்** மலையில் உழுதனர்.

ஆ. முல்லைச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

**தாழைப் பூவைப்** பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

26. கரப்பிடும்பை இல்லார் – இத்தொடரின் பொருள் கூறுக.

**தம்மிடம் உள்ள பொருளை மறைத்துவைத்தல் என்னும் துன்பம் தராதவர்.**

27. தஞ்சம் எளியர் பகைக்கு – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

**தஞ்/சம் – நேர் நேர் – தேமா; எளி/யர் – நிரை நேர் – புளிமா; பகைக்/கு – பிறப்பு.**

28. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

**ஏளனம் செய்யாமல் பொருளுதவி செய்ய வேண்டும்.**

**உதவி பெறுபவர் உள்ளத்தில் மகிழ்ச்சி பெருகும்.**

29. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.

(பெரிய கத்தி/ இரும்பு ஈட்டி/ உழைத்ததால் கிடைத்த ஊதியம்/ வில்லும் அம்பும்)

**உழைத்ததால் கிடைத்த ஊதியம். பகைவர் செருக்கை அழிக்கும் ஆயுதமே செல்வம்.**

30. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

**பாசவர் – வெற்றிலை விற்போர்; வாசவர் – நறுமணப் பொருள் விற்போர்;**

**பல்நிண விலைஞர் – இறைச்சி விற்போர்; உமணர் – உப்பு விற்போர்.**

31. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

**மன்னரின் ஆட்சிச் சிறப்பு, குடிச்சிறப்பு, வீரம், கொடை ஆகியன குறித்த கல்வெட்டுக் குறிப்பே மெய்க்கீர்த்தி.**

32. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

**புத்தகம் வாங்க இயலாத வறுமை; பழைய புத்தகக் கடைக்குச் சென்று குறைந்த விலையில் புத்தகம் வாங்குதல்; தமிழில் புலமை பெறுதல்.**

33. புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக.

**வெட்சி X கரந்தை; வஞ்சி X காஞ்சி; நொச்சி X உழிஞை; தும்பை X வாகை.**

34. 'கொள்வோர் கொள்க, குரைப்போர் குரைக்க, உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'

அ. அடி எதுகையை எடுத்து எழுதுக. **கொள்வோர் - உள்வாய்.**

ஆ. இலக்கணக் குறிப்பெழுதுக. **கொள்க, குரைக்க – வியங்கோள் வினைமுற்று.**

35. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி, எடுத்துக்காட்டுத் தருக.

**கடைசி அடி மூன்று சீர்; மற்றவை நான்கு சீர். வெண்பாவின் பொது இலக்கணம் அப்படியே வரும். எ.கா: அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**

**பகவன் முதற்றே உலகு.**

36. குறிப்பு வரைக. **அவையம்.**

**அறம் அறக் கண்ட நெறிமாண் அவையம் – புறநானூறு**

**அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன.**

**மதுரையில் அவையம் துலாக்கோல் போல நடுவுநிலையானது – மதுரைக்காஞ்சி.**

37. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

**கையில் வாளித் தண்ணீர் எடுத்துச் சன்னல் கழுவுதல்; சாயக் குவளையில் வண்ணம் நிரப்புதல்;**

**துணியால் சன்னலைத் துடைத்துப் பின் வண்ணம் பூசுதல்.**

38. வஞ்சிப் பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.

**வஞ்சிப் பாவுக்கும் கலிப்பாவுக்கும் உரிய ஓசைகள் முறையே தூங்கல் ஓசையும் துள்ளல் ஓசையும் ஆகும்.**

39. தீவக அணியின் வகைகள் யாவை?

**முதல்நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம்.**

40. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு – இத்தொடரை இரு தொடர்களாக்குக.

**நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதல் உண்டு. நான் எழுதுவதற்குத் தூண்டுதலுக்குரிய காரணமும் உண்டு.**

41. ”காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்”- உவமை உணர்த்தும் கருத்து யாது?

**புனித யோவான் வளர்ந்து நற்பலன் வழங்கும் முன்பே தாய் எலிசபெத் இறந்துவிட்டார்.**

42. “அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது”- இக்குறளில் பயின்றுவந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

**நிரல்நிறை அணி. சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தும் அணி.**

43. 'வாழ்வில் தலைக்கனம், தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

**வாழ்வில் தலைக்கனம் – சில மனிதரின் பணம், பதவி, பட்டம்.**

**தலைக்கனமே வாழ்வு – சித்தாள் தலையில் கல் பாரம்.**

# 3 மதிப்பெண் வினாக்கள்

**1.தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?**

* தமிழ் அன்னை மொழி * பழமையான மொழி * குமரிக் கண்டத்தில் நிலைபெற்றது * பாண்டியனின் மகள் * திருக்குறளின் பெருமைக்குரியது.

**2. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' – இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் எழுதுக.**

* மாங்கன்று வாங்கி நட்டேன். * கொய்யாக் கன்று விற்பனைக்கு உள்ளது. * தென்னம்பிள்ளை நட்டேன். * வாழைக்கன்று நடுவதற்கு வாங்கினேன்.

**3. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.**

**தமிழ்:** முத்தமிழ் கொண்டது. முச்சங்கத்தில் வளர்ந்தது. ஐம்பெருங்காப்பியம் கொண்டது. சங்கப் புலவர்களால் வளர்க்கப்பட்டது.

**கடல்:** முத்தைத் தருகிறது. மூன்றுவகைச் சங்குகளைத் தருகிறது. நிறைய கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது. அலைகளால் சங்கினைத் தடுத்துக் காக்கிறது.

**4. அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது – இவ்வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.**

அறிதல், அறியாமை, புரிதல், புரியாமை, தெரிதல், தெரியாமை, பிறத்தல், பிறவாமை.

**5. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். – இப்பத்தியில் தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.**

பூங்கொடி பறித்தாள் – அன்மொழித்தொகை (பூங்கொடியாகிய பெண்)

ஆடுமாடுகள் – உம்மைத்தொகை (ஆடுகளும் மாடுகளும்)

தண்ணீர்த்தொட்டி – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை (தண்ணீரை உடைய தொட்டி)

குடிநீர் – வினைத்தொகை (முக்காலமும் மறைந்து வருகிறது) குடித்த/குடிக்கின்ற/குடிக்கும் நீர்.

மணிபார்த்தாள் – இரண்டாம் வேற்றுமைத்தொகை. – மணியைப் பார்த்தாள்.

**6. முல்லை நிலத்திலிருந்தும், மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?**

முல்லை – தினை, சாமை, வரகு, பால், நெய்.

மருதம் – செந்நெல் அரிசி, வெண்ணெல் அரிசி.

**7. கண்ணே கண்ணுறங்கு! காலையில் நீயெழும்பு!**

**மாமழை பெய்கையிலே மாம்பூவே கண்ணுறங்கு!**

**பாடினேன் தாலாட்டு! ஆடி ஆடி ஓய்ந்துறங்கு! - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை**

**எழுதுக.**

கண்ணே கண்ணுறங்கு – விளித்தொடர்; காலையில் நீயெழும்பு - வேற்றுமைத்தொடர்;

மாமழை பெய்கையிலே – உரிச்சொல் தொடர்; மாம்பூவே கண்ணுறங்கு – விளித்தொடர்;

பாடினேன் தாலாட்டு – வினைமுற்றுத்தொடர்; ஆடி ஆடி ஓய்ந்துறங்கு – அடுக்குத் தொடர்.

**8. ”வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்**

**கோலொடு நின்றான் இரவு”- இக்குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.**

உவமை அணி. ஒரு பொருளை, நன்கு தெரிந்த மற்றொரு பொருளுடன் ஒப்பிட்டு விளக்குவது. இக்குறளில், அரசன் அதிகாரத்தைப் பயன்படுத்தி முறையின்றி வரி விதிப்பது, வேல் போன்ற ஆயுதத்தைப் பயன்படுத்தி வழிப்பறி செய்வதற்குச் சமம் என்று ஒப்பிட்டுக் கூறியுள்ளார் வள்ளுவர்.

**9. “மாளாத காதல் நோயாளன் போல்” என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.**

குலசேகர ஆழ்வார் தன்னை நோயாளியாகவும், பெருமாளை மருத்துவராகவும் உவமைப்படுத்தியுள்ளார்.

**10. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.**

*அறிவியல் கண்டுபிடிப்புகளில் நன்மையும் தீமையும் உள்ளன. * புதிய கண்டுபிடிப்புகள் பல்வேறு பணிகளை இணையத்தின் வாயிலாக எளிமைப்படுத்தி உள்ளன. * மனிதர்களால் செய்யமுடியாத பணிகளை எந்திர மனிதன் எளிதாகச் செய்கிறான். * மருத்துவம், வங்கி, கல்வி முதலியவற்றில் அறிவியலின் பங்கு சிறப்பானதாக உள்ளது.

**11. உங்களுடன் படிக்கும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?**

* படிப்பைத் தொடர்வதால் உதவித்தொகை, அரசின் சலுகைகள் கிடைக்கும். * படித்தால் நல்ல வேலைக்குச் செல்லலாம். * படித்தால் சமூகத்தில் மதிப்பு உயரும். * படித்தால் குடும்பம் மேலோங்கும்.

**12. "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**

**இன்மை புகுத்தி விடும்" - இக்குறளில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.**

ஆற்றுநீர்ப் பொருள்கோள். முயற்சி செல்வத்தை உண்டாக்கும். முயற்சி இல்லாமை வறுமையை உண்டாக்கும். இதில், தொடக்கம் முதல் இறுதிவரை ஆற்றுநீர் போலப் பொருள்கொள்ளுமாறு சொற்கள் அமைந்துள்ளன.

**13. 'முதல் மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாகக் கு.ப.ரா. கவிபாடுகிறார்?**

முதல் மழை விழுந்ததால் மண் பதமாகிறது. உழவர்கள் இறைவனை வணங்கிப் பொன் ஏர் பூட்டுகின்றனர். உழுவதால் மண் சிலிர்க்கிறது. இனிக் கவலை இல்லை என உழவர்கள் மகிழ்கின்றனர்.

**14. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்- இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

ஆந்திர மாநிலம் உருவாகும்போது அதன் தலை நகரம் சென்னையாக இருக்க வேண்டும் என ஆந்திரத் தலைவர்கள் விரும்பினர். அப்போது சென்னை மாநகராட்சியின் சிறப்புக் கூட்டத்தில் ம.பொ.சி. அவர்கள் தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என முழங்கினார்.

15. **"பகர்வனர் திரிதரு நகரவீதியும்**
**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்**
**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"**

அ. இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது? சிலப்பதிகாரம்.

ஆ. பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக. **தூ**சும் **து**கிரும்

இ. எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக. ப<u>ட்</u>டினும் – க<u>ட்</u>டு

ஈ. காருகர் – பொருள் தருக. நெய்பவர்/ நெசவாளி

உ. இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் யாவை? சந்தனம், அகில்.

**16. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில சான்றுகள் தருக.**

* நீர்வளம் பெருக்கி, நிலவளம் கண்டு உற்பத்தியை அதிகப்படுத்தி மக்களைக் காப்பது அரசின் கடமை.

* அறத்தின் அடிப்படையில் குற்றங்களை ஆராயுந்து தண்டனை வழங்க வேண்டும்.

* குடிமக்களைப் பாதிக்காத வகையில் போர் நடைபெற வேண்டும்.

**17. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் தருக.**

*அகவல் ஓசை பெற்று வரும். * ஆசிரியத் தளைகள் பயிலும். * நான்கு சீர் கொண்ட அளவடிகள் வரும். * மூன்று அடிகள் குறைவில்லாமல், அதிகபட்சம் கவிஞரின் எண்ணத்திற்கேற்பப் பல அடிகள் வரும். * பாடலின் கடைசி சீர் ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

18. **'சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம்' என்ற தலைப்பில் பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டத்தில்**

**பேசுவதற்கான உரைக் குறிப்பு ஒன்றை உருவாக்குக.**

நிலம் மாடுபடுதல்: நெகிழி, செயற்கை உரம் பயன்படுத்தக் கூடாது.

நீர் மாசுபடுதல்: தொழிற்சாலைக் கழிவுகளை நீர் நிலைகளில் கலக்கக் கூடாது.

காற்று மாசுபடுதல்: வாகனப் புகை, தொழிற்சாலைப் புகை, நெகிழி எரிக்கும் புகை கட்டுப்படுத்த வேண்டும்.

19. **"சித்தாளின் மனச் சுமைகள் செங்கற்கள் அறியாது"- இடம் சுட்டிப்பொருள் விளக்கம் தருக.**

நாகூர் ரூமியின் 'சித்தாளு' கவிதையில் இவ்வரிகள் இடம்பெற்றுள்ளன.

சித்தாளின் வாழ்வில்படும் துன்பங்களை, அவர்களின் தலை சுமக்கும் செங்கற்கள் அறியாது.

20. **எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?**

* உயிர்பிழைக்கும் வழி அறியேன் * உடல் இயங்கும் வழி அறியேன் * உணவு சமைக்கும் வழி அறியேன் * காட்டில் செல்வதற்கான வழி அறியேன்.

21. **கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.**

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி.

**எ.கா:** "போருழந்து எடுத்த ஆரெயில்...." என்னும் சிலப்பதிகார வரிகள்.

காற்றில் கொடிகள் அசைவது இயல்பு. ஆனால், கோவலன் மதுரையில் வந்தால் கொல்லப்படுவான். எனவே, மதுரைக்குள் வராதே எனக் கொடி அசைவது போலக் கூறப்பட்டுள்ளது.

22. **நிரல் நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.**

சொல்லும் பொருளும் வேறு வேறு இடத்தில் இருக்க, அவற்றை அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல் நிறை அணி ஆகும்.

**எ.கா:** அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது.

இக்குறளில் இல்வாழ்க்கையின் பண்பே அன்பாகவும், பயன் அறனாகவும் பொருள் கொள்ளப்பட்டது.

23. **தீவக அணியை விளக்குக.**

ஓரிடத்தில் உள்ள விளக்குப் பல இடங்களில் வெளிச்சம் தருவது போல், செய்யுளில் ஓரிடத்தில் உள்ள சொல், செய்யுளின் பல அடிகளுக்கும் சென்று பொருள் விளக்குவது தீவக அணி ஆகும்.

**எ.கா:** 'சேந்தன வேந்தன்' எனத் தொடங்கும் பாடல்.

இப்பாடலில் 'சேந்தன' என்னும் சொல் கண் சேந்தன, பகைவர் தோள் சேந்தன, அம்புகள் சேந்தன, திசைகள் சேந்தன, பருந்துகள் சேந்தன எனப் பலவாறு சென்று பொருள் விளக்கம் தருகிறது.

**24. தன்மை அணியை விளக்குக.**

உள்ளதை உள்ளவாறு கூறும் அணி. இயல்பு நவிற்சி அணி என்றும் கூறுவர்.

**எ.கா:** "மெய்யிற் பொடியும்" எனத் தொடங்கும் பாடல்

இப்பாடலில் கண்ணகியின் துயரம் நிறைந்த தோற்றம் உள்ளவாறு கூறப்பட்டுள்ளது.

# அலகிடுதல்

**அலகிடும் முறை:**

குறில் – 1; நெடில் – 2; மெய்யெழுத்து – 0

நேரசை – 1, 2, 10. 20; நிரையசை – 11, 12, 110, 120.

நேர் நேர் – தேமா; நிரை நேர் – புளிமா; நிரை நிரை – கருவிளம்; நேர் நிரை – கூவிளம்.

நேர் நேர் நேர் – தேமாங்காய்; நிரை நேர் நேர் – புளிமாங்காய்; நிரை நிரை நேர் – கருவிளங்காய்;

நேர் நிரை நேர் – கூவிளங்காய்.

**குறட்பாவின் கடைசி சீர் மட்டும் பிரிக்கும் போது:** நேர் – நாள்; நிரை – மலர்; நேர்பு – காசு; நிரைபு – பிறப்பு.

**அலகிடும்போது கவனத்தில் கொள்ளவேண்டியவை:**

- சீர்களை வரிசையாக எழுதுக.
- ஒவ்வொரு சீரிலும் மெய்யெழுத்தை அடுத்து கோடிட்டுப் பிரித்துக் கொள்க.
- குறில், நெடில், ஒற்று என்ற அலகுகளை அறிக.
- நேர், நிரை என்பவற்றைக் குறிப்பிடுக.
- வாய்பாடு குறிப்பிடுக.

| **சீர்** | **அசை** | **வாய்பாடு** |
|---|---|---|
| முயற்/சி | நிரை நேர் | புளிமா |
| திரு/வினை | நிரை நிரை | கருவிளம் |
| ஆக்/கும் | நேர் நேர் | தேமா |
| முயற்/றின்/மை | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| இன்/மை | நேர் நேர் | தேமா |
| புகுத்/தி | நிரை நேர் | புளிமா |
| விடும் | நிரை | மலர் |

**கடிதம்/விண்ணப்பம்: ( கடிதம், விண்ணப்பத்திற்கு அடிப்படை மட்டும் தரப்பட்டுள்ளது. உரிய வழிகாட்டுதல் வழங்கப்பட வேண்டும்)**

## கடிதம்: நண்பனுக்கு/தோழிக்கு/பெற்றோருக்கு…

*********,

17/10/2022.

அன்புள்ள நண்பா,

வணக்கம். நலம். நலம் அறிய ஆவல். ________ ____________ ______________ ___________ ___________________ _____________________ _________________ _________________.

இப்படிக்கு,

உன் அன்பு நண்பன்,

***********

உறைமேல் முகவரி:

பெறுநர்:

*********,

************,

சென்னை.

**விண்ணப்பம்**

அனுப்புநர்:

ஊர்ப்பொது மக்கள்,

***********.

***********.

பெறுநர்:

*********** அவர்கள்,

******************,

****************.

ஐயா,

பொருள்: குடிநீர்/சாலை சீரமைப்பு/ தெருவிளக்கு வசதி வேண்டி…

(தரப்பட்ட தலைப்பு சார்பாக எழுத வேண்டும்)

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

***********.

இடம்: ******

நாள்: 17/10/2022.

**உறைமேல் முகவரி:**

பெறுநர்:

*********,

************,

சென்னை.

## நயம் பாராட்டுக

**தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே**
**தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே**
**ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே**
**உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே**
**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே**
**மாந்தருக் கிருகண்ணா வயங்குநன் மொழியே**
**தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே**
**தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே. – கா. நமச்சிவாயர்.**

**திரண்ட கருத்து:** (பாடலின் பொருள்)

**மையக் கருத்து:**

**தொடை நயம்:**

**மோனைத்தொடை:** பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வருவது.

**தே**னினும் – **தெ**ன்னாடு, **ஊ**னினும்-**உ**ணர்வினுக்கு

**எதுகைத் தொடை:** பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வருவது. தே**னி**னும் – ஊ**னி**னும் – வா**னி**னும்

**இயைபுத் தொடை:** பாடலில் கடைசிப் பகுதி ஒன்றுபோல் வருவது. **மொழியே – மொழியே**

**அணி நயம்:** இயல்பு நவிற்சி அணி/உயர்வு நவிற்சி அணி/ உவமையணி/ சொற்பொருட்பின்வரு நிலையணி

**சந்த நயம்:** சந்தம் அமைத்துப் பாடக் கூடிய ஓசையுடைய பாடலாகும்.

**சுவை நயம்:**

## கட்டுரை எழுதுதல்

வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் தலைப்புத் தருக.

வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை அப்படியே ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதிக் குறிப்புச் சட்டமாக மாற்றுக.

பின், ஒவ்வொரு தலைப்பினையும் எழுதி, அத்தலைப்பு சார்ந்த கருத்துகளைச் சில வரிகளில் எழுதுக.

# துணைப்பாடக் கட்டுரை

### கோபல்லபுரத்து மக்கள்

**அன்னமய்யாவும் இளைஞனும்:** வயலோரம் உள்ள புளிய மரத்தடியில் ஓர் இளைஞனைப் பார்த்தான் அன்னமய்யா. முன்பின் தெரியாத அவனிடம் சென்று பேசினான். மயக்க நிலையில் இருந்த அந்த இளைஞன் தயங்கிப் பேசினான்.

**உணவும் உயிரும்:** வயலோரம் வைக்கப்பட்டிருந்த மண்கலயத்தை எடுத்து அந்த இளைஞனுக்குக் கஞ்சி வார்த்தான் அன்னமய்யா. அந்த இளைஞனின் மயக்கம் தெளிந்து பேசினான்.

**நண்பர்களுடன் உணவு:** அன்னமய்யா அந்த இளைஞனைத் தன் நண்பன் சுப்பையாவிடம் அறிமுகப்படுத்தினான். அனைவரும் கம்மஞ்சோற்றை உண்டு மகிழ்கின்றனர்.

**அன்னமய்யா பெயர்ப் பொருத்தம்:** அன்னம் என்றால் உணவு. இங்கு, முன்பின் தெரியாதவருக்கு உணவு வழங்கி உயிர் கொடுத்த உணர்வாளர் அன்னமய்யா. பெயரில் எவ்வளவு பொருத்தம்!

**(குறிப்பு: ஆசிரியர்கள் இதுபோன்று துணைப்பாடக் கட்டுரையைச் சுருக்கி எழுதி மாணவர்களுக்குப் பயிற்சி தரலாம்)**

# நிற்க அதற்குத் தக ( வாழ்வியல் வினாக்கள் – 5 மதிப்பெண்)

**1.இன்சொல் பேசுவதால் ஏற்படும் நன்மைகளும், தீய சொல் பேசுவதால் ஏற்படும் தீமைகளும்.**

**இன்சொல்:** பிறர் மனம் மகிழும். அறம் வளரும். புகழ் பெருகும். நல்ல நண்பர்கள் சேர்வர். அன்பு நிறையும்.

**தீயசொல்:** பிறர் மனம் வாடும். அறம் தேயும். இகழ் பெருகும். நண்பர்கள் விலகுவர். பகை வளரும்.

**2. புயல் குறித்த வானிலை எச்சரிக்கை அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை எழுதுக.**

வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றச் செய்வேன்.

புயலின்போது வெளியே செல்வதைத் தவிர்ப்பேன்.

தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பேன்.

மீனவ நண்பர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கச் செய்வேன்.

மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப்பகுதியிலேயே தங்கச் செய்வேன்.

**3. சமூக ஊடகங்களில் மூழ்கி இருப்பவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியலிடுக.**

நல்ல புத்தகங்களை வாசிக்கக் கொடுப்பேன். வீட்டுத் தோட்டம் உருவாக்க வழி செய்வேன். உடற்பயிற்சி செய்ய ஊக்குவிப்பேன். சமுதாயப் பணிகளில் ஈடுபட ஊக்குவிப்பேன். ஓவியம் வரையக் கூறுவேன்.

**4. பள்ளியில் நான், வீட்டில் நான் – என்னும் தலைப்புகளில் நீங்கள் நடந்துகொள்ளும் முறைகளைப் பட்டியலிடுக.**

**பள்ளியில் நான்:** சரியான நேரத்திற்கு வருவேன். சீருடையில் வருவேன். ஆசிரியர்களுக்கு மதிப்புத் தருவேன். வளாகத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்வேன். போட்டிகளில் பங்கேற்பேன்.

**வீட்டில் நான்:** விடியற்காலையில் விழிப்பேன். அன்றாடப் பாடங்களைப் படிப்பேன். பெற்றோர் சொல் கேட்பேன். சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வேன். பெரியவர்களை மதிப்பேன். வீட்டில் என்னால் ஆன உதவிகளைச் செய்வேன்.

**5. நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பவற்றை வரிசைப்படுத்துக.**

எங்கள் கிராமத்தில் நாட்டுப்புறக் கலைகளை வளர்ப்போம். ஊர்த் திருவிழாக்களில் கரகம், கும்மி முதலியன நிகழ்த்துவோம். கிராம விழாக்களில் நாடகங்கள் நடத்த ஏற்பாடு செய்வோம். ஊர் இளைஞர்கள் ஒயில் கும்மி ஆடப் பயிற்சி பெறுவோம். தாரை, தப்பட்டை, வில்லிசை போன்ற நாட்டுப்புற இசைகளைப் பயில்வோம்.

**6. தொல்லியல் கூறுகளைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்களைக் கூறுக.**

கல்வெட்டுகள் மூலம் அறியப்படும் வரலாற்றை நண்பர்களிடம் பகிர்வேன். பழமையான கோவில்கள், சிலைகள் இருக்கும் பகுதிகளை அடையாளப்படுத்துவேன். கல்வெட்டுகளைச் சிதைக்க அனுமதிக்கமாட்டேன். நினைவுச் சின்னங்கள் திருடுபோக அனுமதிக்கமாட்டேன். தொல்பொருட்கள் காண நேரிட்டால் அரசுக்குத் தெரியப்படுத்துவேன்.

**7. அறங்கள் நமக்குக் கைகொடுக்கும் நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் பட்டியலிடுக.**

நல்ல சொற்களைப் பேசுதல் – நல்ல நண்பர்களைப் பெறலாம். பகைவரும் நட்பாவர்.

புறங்கூறுவதைத் தவிர்த்தல் – நட்பு வட்டம் விரியும். நம் மதிப்பு உயரும்.

பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல் – மன அமைதி கிடைக்கும்.

நம்மால் முடிந்த உதவி செய்தல் – மனம் மகிழ்ச்சி பெறும்.

**8. நீங்கள் செய்த உதவியும் அதனால் எய்திய மன நிலையும் பற்றி எழுதுக.**

வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்தது – மனமகிழ்ச்சி, நட்பு.

பிறர் பசிக்கு உணவு அளித்தது – அவருக்குப் பசி தீர்ந்தது. எனக்கு மகிழ்ச்சி.

பாடம் சொல்லிக் கொடுத்தது – நல்ல மதிப்பெண் பெற்று இருவரும் தேர்ச்சி.

# படிவம் நிரப்புதல்

1

நூலக உறுப்பினர் படிவம்

.................மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம்..........................................................................

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண்:

உறுப்பினர் எண் :

1. பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த தேதி :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி / அலைபேசி எண் :
7. முகவரி :

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான்......................................................................நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. .......................... சந்தா தொகை ரூ. ......................... ஆக மொத்தம் ரூ. ...................................... செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் :

தங்கள் உண்மையுள்ள,

திரு / திருமதி / செல்வி / செல்வன் ........................................................ அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணையாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை

(பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர்/மேல்நிலைப்பள்ளி/தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி/மாநகராட்சி/ ஒன்றிய/பேரூராட்சி உறுப்பினர்கள்

## மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவம்

சேர்க்கை எண்: தேதி : வகுப்பும் பிரிவும் :

1. மாணவரின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :
9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவு எண்—ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவரின் கையெழுத்து

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை

### விண்ணப்பப் படிவம்

1. மாணவரின் பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த தேதி :
4. தேசிய இனம் :
5. இரத்த வகை :
6. உயரம் மற்றும் எடை :
7. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :
8. வீட்டு முகவரி :
9. தொலைபேசி/அலைபேசி எண் :
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
11. பள்ளியின் முகவரி :
12. சேரவிரும்பும் விளையாட்டு :

மாணவரின் கையெழுத்து

சேர்க்கை எண்:

தேதி:

பெற்றோர் / பாதுகாவலரின் கையெழுத்து

இடம்:




## பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புதல்

1. பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த நாள் மற்றும் வயது :
4. தேசிய இனம் :
5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
6. வீட்டு முகவரி :
7. தொலைபேசி / அலைபேசி எண் :
8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :
9. தாய்மொழி :
10. பயின்ற மொழிகள் :
11. தட்டச்சு :
12. கணினி :

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதிகூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் ........................ பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள

# காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல்

| | | |
|---|---|---|
| 1 |  | காட்சியில் உள்ளது மாட்சி – அதன்<br>நீட்சிக்கு இதுவே சாட்சி<br>அறிவைப் பூட்டி அமர்ந்தோர் இருக்க<br>புத்தகத்தால் அறிவைத் திறந்தார்<br>அகம் மகிழ்ந்தார்<br>புத்தகம் அறிவின் சாவி! |
| 2 |  | காட்சியில் உள்ளது மாட்சி – அதன்<br>நீட்சிக்கு இதுவே சாட்சி<br>காட்டை அழித்தாய் காற்றைக் கெடுத்தாய்<br>இயற்கை மரம் செயற்கை மூச்சு<br>வேண்டாம் முரண்<br>மரமே நமக்கு அரண்! |
| 3 |  | காட்சியில் உள்ளது மாட்சி – அதன்<br>நீட்சிக்கு இதுவே சாட்சி<br>நாயின் பசி சிறுமியின் வறுமை<br>பகிரப்படும் உணவு<br>வறுமையில் செழுமை இதுதான்! |
| 4 |  | காட்சியில் உள்ளது மாட்சி – அதன்<br>நீட்சிக்கு இதுவே சாட்சி<br>திறன்பேசி திறன் பெற்றது<br>மனிதனின் திறன் எங்கே?<br>ஒருசெல் உயிரியாய்<br>அடிமையாய்! |
| 5 |  | காட்சியில் உள்ளது மாட்சி – அதன்<br>நீட்சிக்கு இதுவே சாட்சி<br>நிஜங்கள் வெட்டப்பட்டன<br>நிஜமே நிழலாய்<br>மரம் இயற்கையின் வரம்! |
| 6 |  | காட்சியில் உள்ளது மாட்சி – அதன்<br>நீட்சிக்கு இதுவே சாட்சி<br>காளையர் ஆடும் ஒயில்<br>கலைக்கு இதுவே உயிர்<br>மேளதாளம் ஆடல்கலை<br>வாழ வைக்கும் தெய்வம்! |

| | | |
|---|---|---|
| 7 |  | காட்சியில் உள்ளது மாட்சி – அதன்<br>நீட்சிக்கு இதுவே சாட்சி<br>ஏர்முனைக்கு நேர் இல்லை<br>பாரில் கார் உள்ளோரும்<br>ஏரின் பின்னே தான்!<br>உழவு போற்றுதும்! உழவு போற்றுதும்! |
| 8 |  | காட்சியில் உள்ளது மாட்சி – அதன்<br>நீட்சிக்கு இதுவே சாட்சி<br>ஏற்பது இகழ்ச்சி!<br>ஐயமிட்டு உண்!<br>கொடையைத் தடுக்காதே!<br>மகிழ்வித்து மகிழ்! |
| 9 |  | காட்சியில் உள்ளது மாட்சி – அதன்<br>நீட்சிக்கு இதுவே சாட்சி<br>இன்பம் சிரிக்க துன்பம் அழுவதைப்<br>படமாக்கும் தாமி<br>நிழற்படம் கண்டு அழுமே சாமி! |